சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

வழக்கு எண். ஓ.எஸ்.109/2015

2019ம் ஆண்டு திங்கள் ம் நாள் வாதியின்/ பிரதிவாதியின் மனுதாரரின்/எதிர்மனுதாரரின் DW.1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சுயம்புசெல்வம் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமானம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கார்த்திகைசெல்வி | தொழில் | |
| தந்தை/கணவர் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | சாதி | |
| தாலுகா | | வயது | |

குறுக்கு விசாரணை(தொடர்ச்சி)

04.01.2019 - போஸ் இறக்கும் போது எனக்கு 1 1/4 வயது ஆகும். பள்ளியில் சேர்க்கும் பொழுது என் அம்மா தான் விபரம் சொன்னார். எனக்கு அந்த விபரங்கள் நேரடியாக தெரியாது என்றும், என் தாயார் விபரம் சொன்னார் என்று வழக்கிற்காக பொய் சொல்லுகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. என் கணவருக்கு 7 சொத்துக்களை தானமாக எழுதிக்கொடுத்தேன். எனது பெயரில் 3 சொத்துக்கள் இருக்கின்றன. 1994ம் ஆண்டு பாகம் பிரிக்கப்பட்டது. 2010ம் ஆண்டு ஆகஸ்டு முதல் வாரத்தில் பாகம் பிரித்ததாக வாக்குமூலத்தில் சொல்லப்பட்டது சரியா என்றால் சரியல்ல. என் பெரியப்பா இருக்கும்போதே பாகம் ஆகிவிட்டது. 1994ம் ஆண்டு பாகம் பிரிக்கப்பட்டது என்று என்னுடைய எதிர்வழக்குரையில் சொல்லவில்லை. தாவா சொத்துக்கள் இதுவரை பாகம் ஆகவில்லை என்றால் சரியல்ல. கருப்பசாமி, செல்லம், என் பெரியப்பா மற்றும் நான் கலந்து கொண்டு பாகம் பிரிக்கப்பட்டது. கருப்பசாமி எனக்கு உறவினர் என்பதால் செல்லம் என்பவர் வேண்டியவர் என்பதாலும் அவரை இந்த வழக்கில் சேர்த்திருக்கிறோம் என்றால் சரியல்ல. பாகம் பிரிக்கும்போது போதும்பொண்ணு கலந்து கொள்ளவில்லை. நாகமணி, சேது ஆகியோர் இருந்தார்கள். அவர்கள் சுப்பிரமணிய தேவரிடம் பாகம் கேட்டார்களா என்றால் சுப்பிரமணியதேவர் எனக்குள்ள பாகத்தை தந்தார். என் கணவர் பஞ்சாயத்து தலைவராக எந்த காலத்திலும் இருந்ததில்லை. என் கணவர் அண்ணா தி.மு.க.அரசியல் கட்சியை சேர்ந்தவர். வா.சா.ஆ.11

ஆவணம் தாவா சொத்தில் வில்லங்கம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. என் கணவர் அரசியல் செல்வாக்கினால் பட்டா மாறுதல் உத்தரவு பெறப்பட்டது என்றால் சரியல்ல. நான் போஸ் என்பவருக்கு பிறக்கவில்லை என்றால் சரியல்ல. என் தகப்பனார் பெயர் ஏழுமலை என்றால் சரியல்ல. என் உடன் பிறந்தவர் ரமேஷ் என்பவர் இருக்கிறார் என்றால் இல்லை. என் தாயார் முறைதவறி நடந்த காரணத்தினால் போஸ் என்பவர் தற்கொலை செய்து கொண்டார் என்றால் இல்லை. சேகர் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நடந்து வரும் வழக்கில் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகளுடன் நான் உடன்பிறக்கவில்லை என்பதால் என்னிடம் பாகம் கேட்கவேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. வாதி என்மீது நில அபகரிப்பு போலீசாரிடம் புகார் செய்தார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஜெராக்ஸ் நகல் என்பதால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றால் சரியல்ல. நில அபகரிப்பு சம்பந்தமாக எந்த நீதிமன்றத்திலிருந்து எனக்கு சம்மன் வரவில்லை. வாதி நில அபகரிப்பு போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்ததாக இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு சொத்தில் பாகம் இல்லை என்றால் சரியல்ல. நான் போஸ் என்பரின் மகள் இல்லை என்றும், அதனால் வா.சா.ஆ.11 ஆவணம் செல்லாது என்றும் சொன்னால் சரியல்ல. வாதிக்கு பரிகாரம் கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

இல்லை